සියලුම හිමිකම් ඇවිරිනි
All Rights Reserved

Downloaded www.paritchai.com

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## தமிழ் மொழியும் இலக்கியமும் - දෙමළ භාෂාව හා සාහිත්‍ය

தரம் : **6** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1) ரவி கோபத்துடன் காணப்பட்டான். கோபம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
   1) ஆசை 2) அமைதி 3) சினம் 4) பொறுமை

2) 'அழகு மிக்க பிள்ளையே அங்கும் இங்கும் ஓடியே" இங்கு அழகு என்பதன் ஒத்தக்கருத்துடைய சொல்,
   1) அலங்கோலம் 2) எழில் 3) மகிழ்ச்சி 4) பொறாமை

3) அரசன் கொடையில் சிறந்தவன்" இங்கு கொடை என்பதை குறிக்காத சொல்
   1) தர்மம் 2) தானம் 3) ஈகை 4) அறிவு

4) 'மக்கள் கோடையால் அவதியுற்றனர்" கோடை என்பதன் எதிர்ப்பதம்
   1) வாட்டம் 2) மாரி 3) வரட்சி 4) குளிர்ச்சி

5) 'நடிகன் நன்றாக ஆடினான்" இங்கு நடிகன் என்பதன் எதிர்ப்பாற் பதம்,
   1) நடிகை 2) நடிகி 3) ஆடவன் 4) தலைவி

6) குரங்கின் ஆண் கடுவன் என்பது போல பெண்
   1) களிறு 2) எருது 3) மந்தி 4) போத்து

7) நெல்லின் இளையது நாற்று என்பது போல பனையின் இளையது,
   1) குட்டி 2) வடலி 3) மூசு 4) கன்று

8) புலி உறுமும் என்பது போல பசு
   1) கத்தும் 2) கதறும் 3) அழும் 4) முக்காரமிடும்

9) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழியின் கருத்தாக அமையக்கூடியது,
   1) அடித்தால் அம்மியும் நகரும் 2) விடாமுயற்சி
   3) தூய்மை 4) அம்மி நகர்ந்து செல்லும்

10) வேகமாக ஓடிய பூனையைக் கண்டேன். இங்கு எழுவாய்
   1) பூனையை 2) வேகாக 3) நான் 4) ஓடிய

11) தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மொத்த எழுத்துக்கள்
   1) 216 2) 247 3) 12 4) 18

Downloaded www.paritchai.com

12) அறுபதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
1) பொன் விழா 2) மணி விழா 3) வெள்ளி விழா 4) அமுதவிழா

13) ஈ-மெயில் (e-mail) என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்,
1) இணையம் 2) மின்னஞ்சல் 3) தொலைநகல் 4) வலைத்தளம்

14) பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி
1) படபட 2) சிறு சிறு 3) மூலைடுக்கு 4) பென்னம் பெரிய

15) நட்சத்திரங்கள் வானில் மின்னின. இங்கு நட்சத்திரங்கள்
1) பெயர்ச்சொல் 2) வினைச்சொல் 3) பெயரடை 4) வினையடை

16) பின்வருவனவற்றுள் முன்னிலை ஒருமை உயர்திணைச் சொல்
1) நான் 2) நீ 3) அவன் 4) சாந்தன்

17) நானும் நீயும் பாடசாலைக்குச் ..........................
1) செல்வேன் 2) சென்றான் 3) செல்வோம் 4) செல்

18) பின்வருவனவற்றுள் அடுக்குச் சொல்லாக அமையாதது,
1) பெரிய பெரிய 2) போ போ 3) நில் நில் 4) வெட்டவெளி

19) கண் திறத்தல் என்ற மரபுத்தொடரின் கருத்து,
1) அறிவு உண்டாதல் 2) உறங்குதல் 3) விழித்தல் 4) அறிவு வளர்தல்

20) ஒருவருடைய கூற்றை அப்படியே எடுத்தாளும் போது இடப்படுவது,
1) அரைப்புள்ளி 2) முக்காற் புள்ளி 3) மேற்கோட்குறி 4) முற்றுப்புள்ளி

(40 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களில் கட்டுரை வரைக.
   1) நான் விரும்பும் பெரியார்
   2) வாசிப்பின் பயன்கள்
   3) பழைய குடையின் சுயசரிதை
   4) நான் பறவையானால்...

(15 புள்ளிகள்)

2. உமது பாடசாலையில் நடந்த இல்ல விளையாட்டுப் போட்டி பற்றி உமது நண்பனுக்கு 50 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

3. பின்வரும் சொற்களின் கருத்துப்புலப்பட வாக்கியங்களில் வைத்து எழுதுக.
   1) வெல்லம்
   2) தவலை
   3) மழை
   4) கலை
   5) களை

(15 புள்ளிகள்)

Downloaded www.paritchai.com

4. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1) படைத்தல் கடவுளாக கருதப்படுபவர் யார்?
   2) தென்னை மரத்தின் பயன்கள் இரண்டு தருக.
   3) புதிய ஆத்திசூடியில் உள்ள அறக்கருத்துக்கள் இரண்டு தருக.
   4) செய்திகளைத் தெரிவிக்கும் ஊடகங்கள் இரண்டு தருக.
   5) செய்ந்நன்றி அறிதல் என்றால் என்ன?

(10 புள்ளிகள்)

5. பின்வரும் மொழித்திறன் பாடலை வாசித்து, அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

*களைப்பறிக்க களைப்பறிக்க*
*கழனிக்குப் போனேன். அங்கு*
*கலையைக் கண்டு கலையைக் கண்டு*
*கண்விழித்து நின்றேன்*

*மலைக்கு மேலே மலைக்கு மேலே*
*மலர் பறிக்கப் போனேன்*
*மழை வந்ததால் மழை வந்ததால்*
*மனம் தடுமாறிப் போனேன்*

   1) கழனிக்குச் சென்றதன் காரணம் யாது?
   2) மலர் பறிக்க எங்கு சென்றார்?
   3) மனம் தடுமாறியதன் காரணம் என்ன?
   4) ஒத்த ஓசை சொற்கள் இரண்டு தருக.
   5) பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்து தருக.
      அ) கழனி ஆ) மனம்

(10 புள்ளிகள்)

6. பின்வரும் சொற்களை ஒழுங்கு படுத்தி பொருளுள்ள வாக்கியங்களாக எழுதுக.
   1) மனமே / மருந்து / பொன் / என்ற / செய்யும் / போதும்
   2) செய்த / சிறிது / எனினும / காலத்தினால் / நன்றி / மாணப் / பெரிது / ஞாலத்தின்
   3) பெண்கள் / ஆடினர் / கூடிநின்று / வட்ட வட்டமாய்க்
   4) வாழ்ந்த / மடகஸ்காரில் / மோனாஸ் / மிகப் பெரியது / யானைப் பறவையே
   5) செய்தித்தாள்கள் / முக்கிய / மக்களின் / ஒன்று/தேவைகளில்

(10 புள்ளிகள்)

7. பின்வரும் வாக்கியங்களை வாசித்து அட்டவணையைப் பூரணப்படுத்துக.
   1) அவன் பத்திரிகையை நன்றாக வாசித்தான்
   2) பெண்கள் தேயிலை கொழுந்தை பறித்தனர்
   3) நான் தினமும் படிப்பேன்
   4) மாலதி கவிதை எழுதினாள்
   5) சீதையை இராமன் மணந்தான்

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| | | |

(10 புள்ளிகள்)

